2023 ஏப்ரல் 12]

ஏற்படுகின்றன. அதே contractor, ஒப்பந்ததாரரை அழைத்து இதை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 144, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

144—

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

***8591—திரு. துரை. சந்திரசேகர்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், செம்பாசிகுப்பம் கிராமத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், லைட்ஹவுஸ்குப்பம் ஊராட்சி, செம்பாசிகுப்பம் கிராமத்தில் தொண்டு நிறுவனம்மூலம் 2019–2020 ஆம் ஆண்டு ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. தற்போது புதிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்காலம் தொடங்கிவிட்டால் மீஞ்சூரைச் சுற்றியுள்ள கடற்கரைக் கிராமங்களில் குறிப்பாக, நெய்தவாயல், வயலூர், காட்டூர், மேரட்டூர், திருவெள்ளைவாயல், நந்தியம்பாக்கம், வல்லூர், அத்திப்பட்டு போன்ற கிராமங்களுக்குள் உப்புநீர்*

வந்துவிடுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, லைட்ஹவுஸ்குப்பம், செம்பாசிகுப்பம் ஆகியவை மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள பகுதிகள் ஆகும். அது 13 கிராமங்கள் அடங்கிய ஓர் ஊராட்சி. ஆகவே, இந்தக் கிராமங்களுக்கு அதிகளவில் குடிநீர் தேவைப்படுவதால், நீங்கள் புதிதாகக் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர வழி உண்டா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பாசிகுப்பம் கிராமத்தில் 250 வீடுகள் உள்ளன. அங்கே மக்களுடைய தேவைக்காக ஒவ்வொரு நாளும் 5,000 லிட்டர் கொள்ளளவுக் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. இதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த ஊராட்சியில் 13 கடலோரக் கிராமங்கள் இருக்கின்றன. அதில், மக்களின் தேவைக்கேற்ப நிலத்தடி நீராதாரம் ஆய்வு செய்யப்பட்டு, கூடுதலாக சுத்திகரிப்பு நிலையம் தேவையின் அடிப்படையில் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. எங்கெல்லாம் தேவையிருக்கிறதோ, அங்கெல்லாம் நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்பட்டு, குடிநீர் வசதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். திருவள்ளூர் மாவட்டத்தில் 2022–2023 ஆம் ஆண்டில் 58 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 1,069 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. சோழவரம், மீஞ்சூர் ஒன்றியப் பகுதிகளில் அந்தப் பணிகளை எடுத்திருக்கிறோம்.*

முற்பகல் 10–35

மீஞ்சூர் பகுதியில், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் பல்வேறு திட்டங்களின்மூலம் 254 குடிநீர்ப் பணிகள் ரூ.18.68 கோடி மதிப்பீட்டில் 2022–2023 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டு, இப்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலான பணிகள் முடிவுற்றிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவைப்படுகின்ற கிராமங்களைக் குறிப்பிட்டுச் சொன்னால் அவற்றை ஆய்வு செய்து அந்தப் பணிகள் நிறைவேற்றித் தரப்படும்.

2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர் அவர்கள்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் விரிவான பதிலுக்கு மிக்க நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

கலைக் கல்லூரி

***11986— திரு. கோ. செந்தில் குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி அமைந்துள்ள திருப்பத்தூர் மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், மூன்று அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் ஒன்பது சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர நான்கு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியும் மற்றும் 10 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ, மாணவியரின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.